பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் விழா - வாடிப்பட்டியில்

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப்.15

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த தினத்தை முன்னிட்டு வாடிப்பட்டியில் உள்ள அண்ணாரின் திருவுருவ சிலைக்கு 15.09.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி கொண்டாடப் பட உள்ளதாகவும் இதில் கழகத்தினர் அனைவரும் திரளாக பங்கேற்குமாறும் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்



அதன் விபரம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு உணர்த்தி அதை நடைமுறைப்படுத்திய வரும், தமிழ் நாட்டு மக்களால் ஒட்டு மொத்த தமிழர்களால் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்பட்டு வரும் என்றும் தமிழ் நாட்டு மக்களின் மனதில் வாழ்பவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையம் முன்பாக

அமைந்துள்ள அன்னாரின் திருஉருவ சிலைக்கு வருகிற 15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது

இந்நிகழ்வில் மதுரை வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி. மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

---

முனைவர் க.பொன்முடி தலைமை! விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா 118வது பிறந்த நாள் விழா பேரணி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், செப். 15-

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு

அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (15.09.2026 செவ்வாய்க் கிழமை) காலை 8.30 மணிக்கு, விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருக்கோவிலூரில் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி தலைமையில், மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் திருக்கோவிலூர் ஐந்து முனை சந்திப்பில் இருந்து பேரணியாக சென்று கபிலர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது. மாவட்ட துணை செயலாளர்கள் டி.என். முருகன், இரா.கற்பகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொள்ள உள்ள இந்நிகழ்வில் திருக்கோவிலூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன்.



விக்கிரவாண்டியில் (15.09.2026 செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிக்கு நடைபெற உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ம.அப்துல் சலாம், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி உள்ளிட்ட நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்கிறார்கள். நிகழ்வில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

தளபதி இரத்த தான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம்!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்! நா.கார்த்திக் – துரை.செந்தமிழ்ச் செல்வன் பங்கேற்பு!

கோவை, செப். 15-

கோவை தளபதி இரத்த தான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம் (19.9.2026 சனிக்கிழமை) காலை 8 மணி முதல் மதியம் ஒரு மணி வரை கோவை வரதராஜபுரம் சாய் விவாகா மஹாலில் நடைபெறுகிறது.

இம்முகாமை முன்னாள் அமைச்சர், கோவை மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்.

இம்முகாமிற்கு கழக மாநில தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக் தலைமை வகிக்கிறார்.

கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் வாழ்த்துரை வழங்குகிறார்.


மேலும் இம்முகாமில் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி., கழக சொத்து பாதுகாப்புக் குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், தலைமைக் கழகப் பிரதிநிதி எஸ்.ஆர். பார்த்திபன், தலைமைக் கழகப் பிரதிநிதி ரேகா பிரியதர்ஷினி, கழக பொதுக் குழு உறுப்பினர் இரா. மணிகண்டன், சிங்கா நல்லூர் பகுதிக் கழகப் பொறுப்பாளர் சிங்கை மு.சிவா எம்.சி., 60வது வட்டக் கழகப் பொறுப்பாளர் செம்மொழி முருகானந்தம், 60 (அ) வட்டக் கழக பொறுப்பாளர் வே.ஜெயராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இம்முகாமில் அனைத்துக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிறைவாக தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்ரமணியன் நன்றி கூறுகிறார்.

---

# அண்ணா, உம் பிறந்தநாள் அகமெலாம் நிறைந்தநாள்!



பல்லவர் கலைமிளிரப்
பலகாலம் ஆண்டிருந்த
கல்விநகர் காஞ்சியிலே
கைத்தறிக் குடும்பத்தில்
நல்லவர் நாடுறும்
நடராசர் பங்காரு
செல்வமக னாய்ப் பிறந்தீர்!
திசையெலாம் திகைப்புறச்
சொல்லழகும் எழுத்தெழிலும்
துள்ளிவரக் கருத்தாறும்
செல்லுமிடம் எங்கெங்கும்
செந்தமிழர் கிளர்ச்சியுறப்
பல்லாண்டு மண்டிய
பகுத்தறிவுக்கு ஒவ்வாத
ஒல்லாத எண்ணங்கள்
ஓட்டியே அரசியலில்
நல்லாறு காட்டவே
நல்லியக்கம் கண்டவரே!

நில்லாது சுற்றியே
நெடுந்தமிழ் நாடெங்கும்
கல்லாதார் நீங்கிடக்
கற்றவர் ஓங்கிட
இல்லாதார் எப்போதும்
இருப்போராய் மாறிடப்
பொல்லாதார் போய்விடப்
பொறுப்புளோர் ஆண்டிட
வெல்லவே செய்தவர்நீர்!
விழுதுபல விட்டிங்கே
எல்லோர்க்கும் பயனளிக்கும
இயக்கமாய் ஆக்கியவர்
வல்லமையாய் அறுபதாண்டு
வண்டமிழ் நாடாள
நல்லுரம் நீர்அன்றோ!
நாடெங்கும் சீர்அன்றோ!

அண்ணா, நீர் பிறந்ததனால்
அல்லவோ தமிழரிடம்
எண்ணங்கள் மாறின,
எழுச்சிகள் தோன்றின!
கண்மூடி வழக்கங்கள்
காணாமல் போயின!
மண்மூடிப்பலகாலம்மறைந்திருந்த
மாண்புகள்
கண்டெடுத்துத் தமிழரிடம்
காலமெலாம் கருத்தோடு
விண்டுரைத்தும் எழுதியும்
விரிவாக விளக்கியும்
தொண்டுநீர் செய்ததனால்
தொல்பெருமை மீண்டது!

குண்டுமழை பொழியாமல்
கூர்வேல் வாள் வீசாமல்
கண்டங்கள் நாடுகள்
கால்கொண்ட அரசுகள்
கொண்டுவந்து காட்டியே
கொள்கைவிதை தூவியதால்
திண்டிருந்து ஆண்டவர்கள்.
திக்குமுக்கு ஆடினர்
துண்டின்றித் துணியின்றித்
தொலைதூரம் ஓடினர்!

வண்டுகள் தேனெடுக்கும்
வஞ்சம்போல் தமிழ்நாட்டைத்
திண்டமர்ந்த வடநாட்டுத்
திமிங்கிலங்கள் விழுங்கிட
மண்டியிட்டுக் காங்கிரசார்
மானமிழந்து அண்டிட,
சுண்டிவிட்டுத் தமிழரின்
தூக்கத்தைக் கலைப்பதற்கு
வெண்கதிராய்ப் பிறந்தவரே!
வெளிச்சத்தைத் தந்தவரே!

கண்மூடி வாய்பொத்திக்
கைகட்டிக் கால்பற்றித்
தெண்டனிட்ட மக்களுக்குத்
திறனளித்து விட்டவரே!
சிண்டுகள் சூழ்ச்சிகளைச்
சிதறடித்துத் தொலைத்தவரே!
பண்டிருந்த பெருமையெலாம்
பலரறிய வைத்தவரே!
ஒண்டவந்த பேர்களெலாம்
உப்பரிகை ஏறிநின்ற
வண்டவாளம் எல்லாமே
வரிவரிப் பட்டியலாய்த்
தண்டவாளம் ஏற்றினீர்;
தன்மானம் போற்றினீர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

வரலாறு தெரியாமல்
வளைத்துள்ள கூட்டமின்று
அரணாகத் தமிழருக்கு
அமைந்தநல் திராவிடத்தின்
முரணாகப் போகிறது
மூடநிலை ஆகிறது!

தரங்கெட்ட தற்குறிகள்
தன்மானம் அற்றதுகள்
புரட்டுக்கோர் அளவில்லை
பொய்கட்கோ அணையில்லை
மிரட்டலுக்கு எல்லையில்லை
மெய்யென எதுவுமில்லை
இரட்டுற மொழிதலும்
ஈனமாய்ச் செய்தலும்
திரட்டியே திரிகின்ற
செந்தமிழர்க்கு எதிரிகளை
விரட்டிட. வேண்டுமன்றோ!
வில்லங்கக் கும்பலன்றோ!
உரம்போட்டு நீர்வளர்த்து
உருவாக்கி உயரத்தில்
நிரந்தரமாய் நிறுத்திய
நெடுங்காலக் கழகந்தான்
பரந்திங்கே இருப்பதனால்
பழையபடி ஆட்சியைப்
புரந்திட வருமென்று
புகல்கிறோம்! அண்ணா, உம்
நிரந்தொளிரும் பிறந்தநாளில்
நிகழ்த்துகிறோம் வஞ்சினம்!
சுரந்தொளிரும் சூரியனைச்
சுற்றுகிற புவிக்கோளில்
இருந்தொளிரும் என்றென்றும்
இலட்சியமே வென்றென்றும்!

விதியென்று கிடந்தோர்க்கு
விழிப்பூட்டி விறலூட்டிக்
கதியாவார் பெரியார்தாம்
கருத்தாலே கைகாட்டி
மதிகொண்டு போராடி
மாற்றாரை வென்றவர்நீர்!
குதித்துவந்து தமிழ்நாட்டைக்
கொள்ளவந்த இந்தியைக்
கொதித்தெழுந்து விரட்டிடக்
கொண்டுவந்தீர் இருமொழி!
துதித்தெழுந்து தமிழ்நாடு
தூயபெயர் சூட்டினீர்
மதித்தொரு சட்டமிட்டீர்
தன்மான மணத்திற்கு!

அதிகார ஆட்சியிலே
அமர்ந்தபின் எத்தனையோ
புரிந்தீரே! பலகாலம்
வதியாமல் போனதற்கு
மாற்றேது? இருந்தாலும்
பதியமிட்டுக் கழகத்தைப்
பண்படுத்தி வைத்ததனால்
சதிசெய்ய முயன்றோர்கள்
சாய்ந்தனர் தரையோடு!
உதவியாய்ப் பேராசிரியர்
உறுதியாய் உடனிருக்க
நிதியாகக் கலைஞர்தாம்
நெடுங்காலம் காத்திருக்க
அதிராத தளபதி
ஆற்றலுடன் செயற்படப்
புதிராகும் வெற்றியெனும்
புகழ்மகுடம் போனதுதான்!
முதிராத விடலைகளின்
மோகநிலைச் செயலாலே
உதிர்ந்ததுபோல் தோன்றினும்
உதித்திடும் சூரியன்தான் !

அண்ணா, உம் பிறந்தநாள்
அகமெலாம் நிறைந்தநாள்!
விண்ணாக, காற்றாக
விரிகதிராய் வளர்தீயாய்
உண்ணுநீர் உணவாக
உணர்கின்றோம்! தமிழ்நாட்டு
மண்ணில்நீர் பிறந்ததுதான்
மாபெருந் தவமாகும்;
அண்ணா நீர் தமிழருக்கு
அகலாத நவமாகும்;
கண்ணிலே கொண்டுயாம்
காலமெலாம் போற்றுவோம்!

---

பல்வேறு அரசுப் பணிகளை தனியார் மயமாக்கும் த.வெ.க. ஆட்சியில்

# இளைய தலைமுறையின் வேலைவாய்ப்புகள் மேலும் பறிபோகும் அபாயம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் அம்பலம்!

சென்னை, செப். 15–

பல்வேறு அரசுப் பணிகள் தனியார் மயமாக்கப்படுவதால் த.வெ.க. ஆட்சியில் இளைய தலைமுறையினரின் வேலை வாய்ப்புகள் மேலும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என தினகரன் நாளேடு 14.9.2026 தேதியிட்ட தலையங்கத்தில் தலைதூக்கும் தனியார் மயம் எனும் தலைப்பில் அம்பலப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ‘தினகரன்’ ‘நாளேடு வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:–

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிகழ, மக்கள் மத்தியில் த.வெ.க.வினர் விதைத்த பொய்கள் ஏராளம், அதிலும் தேர்தல் வாக்குறுதிகளில் செயல்படுத்தவே முடியாத சில திட்டங்களை, ஆட்சிக்கு வரவா போகிறோம் என்கிற அலட்சியத்தோடு அள்ளிவிட்டனர். தேர்தல் கூட்டங்களில் லஞ்ச ஊழலை ஒழிப்பதிலும், சட்டம், ஒழுங்கை பேணிக் காப்பதிலும், இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதிலும் உறுதியாக இருப்போம் என விஜய் உறுதிபட தெரிவித்திருந்தார்


தினகரன்
செப்டம்பர் 14, 2026 திங்கட்கிழமை
தலைதூக்கும் தனியார்மயம்

ஆனால் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பிறகு, கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியாமல் த.வெ.க.வினர் திண்டாடி வருகின்றனர். அத்தகைய வாக்குறுதிகளில் ஒன்றே அரசு துறையை பாதுகாப்பதும், தனியார் மயத்தை ஒழிப்பதுமாகும். தமிழ்நாட்டில் தற்போது தூய்மைப் பணிகள் மற்றும் பல்வேறு அரசுப் பணிகள் தனியார் மயமாக்கப்பட்டு வருவதோடு, ஒப்பந்த விதிமீறல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. மின்வாரியத்தை தனியார் மயமாக்க ஆளும் த.வெ.க. அரசு மறைமுகமாக துணை நிற்பதாக குற்றச் சாட்டுகள் எழுந்து வருகின்றன.

உயர்கல்வித் துறையிலும் தனியார் மூலதனங்கள் தற்போது ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இது நாள் வரை இல்லாத அளவில், த.வெ.க. ஆட்சியில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கண்டக்டர்கள், டிரைவர்கள் பணியிடங்கள் கூட தனியாருக்குத் தாரை வார்க்கப்படும் அபாயங்கள் பெருகி வருகின்றன. இதற்கான டெண்டரை வடமாநில நிறுவனம் எடுத்த நிலையில், எதிர்ப்புகள் காரணமாக த.வெ.க. அரசு அதை தள்ளிப்போட்டுள்ளது.

இந்நிலையில் மருத்துவ சேவை பணியான செவிலியர்கள் பணியிடங்களிலும் தனியார் மயத்தை புகுத்த த.வெ.க. அரசு துணிந்துள்ளது. தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் சுமார் 6,500 தொகுப்பூதிய செவிலியர்கள் பணியாற்றி வருகின்றனர். தேர்தலின்போது த.வெ.க. அளித்த வாக்குறுதியின்படி தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். பணி பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டம் நடந்த இடத்திற்கு நள்ளிரவில் நேரில் சென்ற த.வெ.க. முதன்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா, செவிலியர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்துவிட்டு சென்றார். மேலும் த.வெ.க. தேர்தல் அறிக்கையிலும், ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் உட்பட அரசுத் துறைகளில் 5 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவர்கள் என்ற முக்கிய வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் த.வெ.க. ஆட்சிக்கு வந்த நிலையில், இந்த வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் த.வெ.க. அரசு ஒப்பந்த அடிப்படையில் 4,724 செவிலியர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பாணையை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் மட்டுமே சுமார் 4.75 லட்சம் பதிவு செய்யப்பட்ட செவிலியர்கள் தற்போது அரசு வேலைக்காக காத்திருக்கின்றனர்.

அரசு மருத்துவமனைகளில் செவிலியர் தட்டுப்பாடு அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அரசு 11 மாதம் என தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை நியமனம் செய்வது, இளைய தலைமுறையின் வேலைவாய்ப்புகளை மேலும் பறிப்பதாகும். அரசு ஊழியர்கள் உள்பட அனைத்துத் துறை ஊழியர்களும் அதிருப்தி அடைந்து வரும் நிலையில், தனியார் மயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க த.வெ.க. அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

திராவிட வெற்றிக் கழகம் சார்பில்

# திருச்சியில் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மரியாதை!

## மல்லை சி.ஏ.சத்யா வேண்டுகோள்!

திருச்சி, செப். 15-

செப்டம்பர் 15 செவ்வாய்க்கிழமை திருச்சி மாநகர் மன்னார்புரம் ஜமால் முகமது கல்லூரி வளாகம் VSM மகாலில் திராவிட வெற்றிக் கழகம் முன்னெடுக்கும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்தநாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாள் திராவிட ரத்னா விருதுகள் வழங்கும் முப்பெரும் விழா அழைப்பிதழில் உள்ளவாறு நடைபெறவுள்ளது



மாலை 5 ஐந்து மணியளவில் திராவிட இயக்க செயல்பாட்டாளர்கள் 9 ஒன்பது பேர்களுக்கு திராவிட ரத்னா விருதுகள் வழங்க உள்ளோம்

15/09/2026 செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் திருச்சி சிந்தாமணியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம் என திராவிட வெற்றிக் கழகம் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா தெரிவித்துள்ளார்.